சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 41–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2014–15 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரங்கம் அமைத்து பங்கு பெறுவதற்கான செலவுத் தொகை ரூ.2,57,400/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து நானூறு மட்டும்) விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா–3) துறை

அரசு ஆணை (நிலை) எண்.156 நாள்: 16.12.2014.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.284, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் (சு3) துறை, நாள் 20.11.2014.
2. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை –15. கடிதம் ந.க.எண்.72994/2014/NEDM-1, நாள் 29.11.2014.

* * * * *

ஆணை:

மேலே படிக்கப்பட்ட பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் சென்னை தீவுத்திடலில் நடைபெறும் 41–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பாக அரங்கம் அமைத்து பங்கேற்பதற்கு அனுமதியும், அதற்கான செலவுத் தொகை ரூ.2,57,400/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து நானூறு மட்டும்)–க்கு ஒப்பளிப்பும் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இத்தொகையினை சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக நிர்வாகத் துறைகள் துறைத் தலைவர்களிடமிருந்து கருத்துருக்கள் வரப்பெறுவதை எதிர்பார்த்து அனுமதித்து ஆணை வெளியிடுமாறு சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை கேட்டுக் கொண்டது.

2. மேலே படிக்கப்பட்ட பார்வை இரண்டில் காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் 41–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், 2014–15–ஆம் நிதியாண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு அரங்கு அமைக்க மேலே படிக்கப்பட்ட பார்வை ஒன்றில் காணும் அரசாணை (நிலை) எண்.284, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையின் அரசாணையின்படி ரூ.2,57,400/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதின் அடிப்படையில் மேற்படித் தொகையினை கருவூலத்திலிருந்து பெற்றிட ஏதுவாக உரிய அரசாணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கான அனுமதி அளிக்கப்பட்ட ரூ.2,57,400/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து நானூறு மட்டும்) தொகையை 41–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, அரங்கம் அமைத்து பங்கேற்பதற்கு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது. மேலும் இவ்வரசாணையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை கவனத்தில் கொள்ளுமாறும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(த.பி.பா.)

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2515–00– ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 001 நெறிப்படுத்துதலும் நிர்வாகமும்–I – திட்டத்தில் சேராதது –AA – ஊரக வளர்ச்சி இயக்ககம் 08 விளம்பரமும் பிரச்சாரமும்– 02 – பொருட்காட்சி”

(துதொகு – 2515–00–001–AA-0824)

5. இவ்வரசாணை நிதித் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.68430/ஊ.வ./14, நாள் 12.12.2014–ல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை –600 015.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை –600 035.
மாநில கணக்காயர், சென்னை –600 009/18/35.
நகல்:
அரசு முதன்மைச் செயலாளர்,
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை –600 009.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை –600 002.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளரின்
முதுநிலை தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நிதி (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி)த் துறை, சென்னை –600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.